https://arimanokku.com/ UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19-2 April 2025

Published on 14, April-2025 ISSN: 3049-2688 (Online)

# சீறாப்புராணத்தில் தனிமனித மதிப்புகள்

**மு. பர்வீன் பானு**
ஆய்வாளர், தமிழ்த்துறை, கணேசர் கலை அறிவியல் கல்லூரி
(பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது) மேலைச்சிவபுரி - 622403

**முனைவர் பெரி. அழகம்மை**
உதவிப் பேராசிரியர் மற்றும் நெறியாளர்
தமிழ்த் துறை, கணேச கலை அறிவியல் கல்லூரி
(பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது) மேலைச்சிவபுரி - 622403

**ஆய்வுச் சுருக்கம்**

*தமிழ் மொழி சமணர்கள் பௌத்தர்கள் இஸ்லாமியர்கள் கிறிஸ்தவர்கள் முதலான சமயத்தவர்கள் தங்கள் சமயக் கொள்கைகளை வெளிப்படுத்துவதற்கு இலக்கியங்களைப் படைத்தளித்த சிறப்புக்குரியதாகும். சீறாப்புராணம் தமிழ் இலக்கிய மரபுகளுடன் முகமது நபியின் வரலாற்றை எடுத்துரைப்பதாகும். இக் காப்பியத்தில் உமறுப் புலவர் தனி மனித அறம் குறித்த விரிவான சிந்தனைகளைப் பதிவு செய்துள்ளார். மனிதன் எவ்வாறு அறக்கோட்பாடு உடையவனாக வாழ வேண்டும் என்பதை முகமது நபியின் வாழ்க்கை எடுத்துக்காட்டுகிறது. தனிமனித வாழ்க்கை எத்தகைய தூய்மை உடையதாக இருக்க வேண்டும் வாழ்க்கையில் எத்தகைய கொள்கைகளை ஏற்றுக் கடைபிடிக்க வேண்டும் பிறருக்குப் பயன்படும் வகையில் எவ்வாறு வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும் சகிப்புத்தன்மையோடு எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பனவற்றை முகமது நபியின் வாழ்க்கை வரலாறு எடுத்துக்காட்டுகிறது. மனத்தூய்மை அறங்களுக்கெல்லாம் அடிப்படை என்பதைச் சீறாப்புராணம் ஆழமான நோக்கில் பதிவு செய்துள்ளது. முகமது நபியின் வாழ்க்கை மூலமாக மக்கள் மனித மதிப்புகளைக் கற்றுக் கொள்வதுடன் சிறந்த அறக்கோட்பாட்டாளர்களாக உலக வாழ்வில் சிறந்து விளங்க இயலும். எத்தனை துன்பங்கள் வந்தபோதும் அனைத்தையும் பொறுமையாலும் விட்டுக் கொடுக்கும் குணத்தாலும் வெல்ல முடியும் என்பதை முகமது நபியின் வாழ்க்கை தனிமனித அறக்கோட்பாடாக வெளிப்படுத்தி இருக்கிறது.*

**குறிப்புச் சொற்கள்:** *மனித மதிப்பு, அறம், குரான், முனஜாத்து, கிஸ்ஸா, காபிர்கள்*

**முன்னுரை**

*தமிழ் இலக்கிய வரலாற்றில் இஸ்லாமிய இலக்கிய வகை குறிப்பிடத்தக்கதாகும். எல்லாச் சமயத்தினரும் தங்களுக்கென்று தங்கள் சமயக் கொள்கைகளை வலியுறுத்த இலக்கியப் படைப்புகளை உருவாக்கியதுபோல இஸ்லாமியர்களும் பல்வேறு இலக்கிய வகைகளைப் படைத்தளித்தனர். அவ்வாறு அவர்கள் படைத்தளித்த இலக்கிய வகைகளில் புராணம் பிள்ளைத்தமிழ் முனஜாத்து கிஸ்ஸா நாமா படைப்போர் முதலியன குறிப்பிடத்தக்கவை. இஸ்லாமிய இலக்கிய வகையில் குறிப்பிடத்தக்கதாக அமைவது உமறுப்புலவர் படைத்த சீறாப்புராணம் என்னும் காப்பியமாகும். முகமது நபியின் வாழ்க்கை வரலாறு தமிழ் மரபுக்கும் நிலவியல் சூழலுக்கும் ஏற்றவாறு உமறுப்புலவர் படைத்துத் தந்திருக்கும் விதம்*

போற்றத்தக்கது. சீறாப்புராணம் முகமது நபியின் வாழ்க்கை வரலாற்றை எடுத்துக் கூறுவது என்பதால் காப்பியத்தில் தனிமனித மதிப்புகள் மிகுதியாகக் காணப்படுகின்றன. தேவ தூதனாக அவதரித்த முகமது நபி உலக நன்மைக்காக எழுத்தருளி வாழ்கின்ற காலத்தில் இறைவனது ஆணைப்படியே தன்னுடைய செயல்பாடுகளை மேற்கொள் கிறார். தன்னுடைய வளமான சிந்தனைக ளாலும் செயல்களாலும் பிறருக்கு நன்மை நிகழும் வகையில் வாழ்ந்த நபிகள் நாயகம் வீரம் பெருமிதம் பொறுமை முதலான நல்ல குணங்களின் உறைவிடமாக இருந்ததைச் சீறாப்புராணம் பதிவுச் செய்துள்ளது. இக்கட்டுரை சீறாப்புராணத்தில் அமைந்தி ருக்கும் தனி மனித மதிப்புகளை ஆராய்கிறது.

## தனி மனிதனும் அறமும்

வள்ளுவர் மனத்தளவில் குற்றம் இன்றி இருப்பதை அறம் என்று குறிப்பிடுவர் (குறள். 34) உலகில் வாழும் ஒவ்வொருவரும் அறத்தைக் கடைப்பிடிப்பதன் வாயிலாக சமூகம் அறம் விளையும் களமாக அமையும். சமுதாயம் தனிமனிதர்கள் பலரால் கட்டமைக்கப்பட்டது. பழமொழி இலக்கியம் "தனிமரம் காடாதல் இல்" **(பழமொழி, 2007, 390:4)** என்னும் பழமொழியின் வாயிலாக தனி மரம் எவ்வாறு தோப்பாகாதோ அவ்வாறே தனிமனிதன் சமூகமாக முடியாது என்பதை வலியுறுத்துகிறது. மனிதன் சமூகத்தில் வாழும் காலத்தில் தன்னுடைய தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காகப் பிறரோடு இணைந்தும் முரண்பட்டும் நடுநிலையோடும் செல்ல வேண்டியவனாக இருக்கிறான் அவ்வகையில் தனி மனிதன் சமூகம் சிறக்க நல்லறங்களை மேற்கொள்ள வேண்டியவனாக இருக்கிறான்.

## உயிர் இரக்கப் பண்பு

உலகில் எல்லா உயர்களும் வாழ்வதற்கான இடம் உள்ளது. பிற உயிர்களையும் தன் உயிர்போல் போற்றி உயிர் இரக்கப் பண்புடன் வாழ்தல் நன்றாகும். உயர்திணை க்கு அருள் வழங்கியதோடு மட்டுமன்றி அஃறிணை உயிர்களையும் இரக்கப் பண்பு டன் அணுகும் உயரிய குணத்தை நபிகள் நாயகம் பெற்றிருந்தார். இதற்கு முகமது நபி வேடனிடம் இருந்து உடும்பைக் காத்த நிகழ்வைச் சான்றாகக் காட்டலாம். வேடன் உடும்பைக் கையகப் படுத்திய காட்சி பின்வரும் பாக்களில் விவரிக்கப்படுகிறது.

**கானகம் சுற்றியும் கல்லைத் தள்ளியும்**
**மானினம் தடைப்பட வலைகள் வீசியும்**
**தான்மல முழைஞ்சினும் தடவி நோக்கியும்**
**ஊன்பொசித் திடுவதற் கொன்றும்**
**காண்கிலேன்** (சீறா. உடும்பு. 10)

**அடவியிற் புகுத்தரும் பதுக்கை சுற்றியோர்**
**புடையினின் முசலிகை புகுதக் கண்டனன்**
**தடைபட வலைவயின் சாய்த்து மேற்சிலை**
**உடைபடத் தாக்கித்தன் உரத்திற் பற்றினான்**
(மேலது. 11)

பசியின் காரணமாக உண்ணுவதற்கு ஏதும் கிடைக்காத வேடன் காட்டைச் சுற்றி வந்தான். கல்லைத் தள்ளினான். விலங்கு களைப் பிடிக்க வலை வீசினான். மலைக் குகைகளில் புகுந்து அங்கு ஏதேனும் இருக்கிறதா என்று தேடினான். காட்டில் பொந்துக்குள் உடும்பு ஒன்று செல்வதைக் கண்ணுற்று அதனை முயன்றது பிடித்தான். உடும்பைப் பிடித்துக் கொண்டு வரும் வழியில் அவன் நபிகள் நாயகம் நண்பர்களு டன் பேசிக் கொண்டிருந்த காட்சியைக் கண்டான். நபியின் தோற்றத்தைக் கண்ட அவன் நபியின் பெருமிதத் தோற்றத்தைக் கண்டு அதிசயித்து யார் என வினவுகிறான். அதற்கு நபியின் நண்பர்கள் இறைத் தூதர் என்று விளக்கம் தருகின்றனர். வேடன் நபியை நோக்கித் தங்களுக்கு அருளப்பட்ட வேதம் எது என்று விவை அதற்கு, குரான் என்று பதிலளித்து அதனைப் பின்பற்று வோர் நலம் பெறுவர் என்றும் மற்றோர் துன்புறுவர் என்றும் கூறுகிறார். வேடனை நோக்கிக் கலிமா கூறி இஸ்லாத்தில் சேர வேண்டுகிறார். வேடன் நீரே நபி எனில் என்னிடம் உள்ள உடும்பை வாய் திறந்து பேசச் செய்ய வேண்டும் என்று கூறுகிறான். நபிகள் அதற்கு ஒத்துக் கொண்டு உடும்பைக் கீழே விடுமாறு கூற வேடன் உடும்பைத் தரையில் விடுகிறான். உடும்பு தலையை உயர்த்திக் காலைத் தரையில் பதித்து வாலை நிமிர்த்தி நபியிடம் பேசத் தொடங்கியது. இறைவனின் அருள் தன்மையையும் நபிகளின் சிறப்பையும் உடும்பு கூறக்கேட்ட வேடன் நபிகள் நாயகத்தைப் பணிந்து வணங்கினான். உயிர் இரக்கப் பண்பு உடையவனாக உடும்பை விடுவித்ததுடன் தன்னை இசுலாத் துடன் இணைத்துக் கொண்டான். வேட னின் உயிர் இரக்கப் பண்பு,

**உனைப் பிடித்து அடர்ந்தனன் உனது**

செய்கையால்
எனைப் பிடித்து அடர்பவம் இன்று
போக்கினேன்
மனைத்தட வளை செல் என்று உடும்பை
வாழ்த்தினான்
பனைத்தடக் கரக்களிறு அனைய
பண்பினன் *(மேலது. 38)*

என்னும் பாடலில் வெளிப்படுகிறது.

## மன்னிக்கும் பண்பு

முகமது நபி தவறு செய்தவர்களைத் தண்டிக்கும் குணம் இன்றி மன்னிக்கும் மனப்பான்மை கொண்டவராக விளங்கினார். முகமது நபியும் மக்கா நகர வணிகர்களும் ஷாம் நகரில் தங்கி இருந்தபோது அபூபக்கர் நபியுடன் உடன் இருந்தான். அங்கு தீய எண்ணங்களுக்கும் செயல்களுக்கும் இருப்பிடமான அபூஜகில் என்பவனும் இருந்தான். நபிகள் தங்கியிருந்ததை காபிர்கள் கண்டனர். முகமது நபி வரும் நாட்களில் சாம் நகரில் நபியாக விளங்கப் போகின்றவர் என்பதை அறிந்து கொண்டனர். தாங்கள் காலம் காலமாகப் பின்பற்றி வரும் சமயம் அழிந்து விடக்கூடாது என்பதற்காக முகமது நபியை கொலை செய்வதற்கு திட்டம் தீட்டினர். முகமது நபியும் மைசறாவும் தரகரும் காபிர்களின் இருப்பிடத்தை அடைந்த போது காபிர்கள் மனத்தில் வஞ்சக எண்ணம் கொண்டிருந்தாலும் அதனை வெளிக்காடாமல் இனியமொழியுடன் வரவேற்றனர்.

மைதவழ் குடையீர் இந்த மனையிடைப்
புகுத யாங்கள்
செய்தவப் பலனோ முன்னோர்
திளைத்தபுண் ணியத்தின் பேறோ
எய்திய பெற்றி என்ன இசைந்தநன் முகமன்
ஆகப்
பொய்திகழ் நாவால் வஞ்சம் பொருந்திய
மனத்தர் சொன்னார்
*(மேலது. கரம் பொருத்து படலம், 39)*

முகமது நபியை இருக்கையில் அமர வைத்து மேலிருந்து கல்லை போட்டுக் கொன்று விட வேண்டும் என்பது தீயவர்களின் எண்ணம். கலை தள்ளிவிடுமாறு ஒருவன் கண் காட்ட ஒருவன் தள்ளிய கல் முகமது நபியின் மீது விழாமல் தள்ளியவன் கைகளை நெரித்தது. பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு கல்லை அகற்ற முடியவில்லை. துன்புற்றவனின் நிலையை அறிந்த தரகர் பிறருக்குத் துன்பம் செய்ய நினைப்பவர்களைத் துன்பம் அழிக்கும். நல்லவர்களை அறக் கோட்பாடு உடையவர்களைத் துன்பம் நெருங்காது என்று கூறுகிறார்.

ஈரம் சுற்றபுன் மனம்சிறி யவர் திரண்டு
இகலிக்
கோர மாகிய பழியை எண் ணாக் கொடுங்
கொலையாய்த்
தேரு நல்லறி வாளருக்கு இழைத்திடும் தீங்கு
நீரி டைக்கனல் நெருப்புகுத் திடுவது
ஒத்திடுமே *(மேலது. 39)*

நடந்த அனைத்தையும் அறிந்த முகமது நபி தனக்கு காபிர்கள் குற்றம் செய்திருக்கிறார்கள் என்பதை அறிந்தும் அவர்களை மன்னிக்கும் பண்புடையவராக விளங்கினார். தனக்குத் துன்பம் செய்தவன் என்று கூடப் பாராமல் கல் தாக்கிக் கை அறுபட்டவனின் கையைச் சரிப்படுத்துகிறார். அவன் நபியைப் பணிந்து வணங்கிச் செல்கிறான். இச்செயல்களை சீறாப்புராணம்,

முன்னை நாளினும் பெலனுறு முழுமலர்க்
கரத்தால்
வண்ண மாமலர் முகம்மதின் இணையடி
வருடி
இன்னல் நீக்கினை இருகரம் பொருந்தினை
இனி என்
தன்னை ஆளுதி கடன் என அடிக்கடி
தாழ்ந்தான் *(மேலது. 65)*

என்னும் பாடலில் தெளிவுபடுத்துகிறது.

## அஃறிணைகளின் நேரிய வழி

காபீர்கள் முகமது நபியைக் கொல்லும் எண்ணமும் துன்புறுத்தும் எண்ணமும் கொண்டிருந்ததை சீறாப்புராண ஆசிரியர் ஓநாய் பேசிய பகுதியின் மூலம் தெளிவுப் படுத்தியுள்ளார். ஓநாயின் உரை முகமது நபியின் தூய குணங்களை விளக்குவதாகவும் இசுலாம் நெறியைச் சிறந்த நெறி என்றும் தெளிவு படுத்துவதாகவும் அமைகிறது. மான் கூட்டம் மேய்ந்து கொண்டிருந்தபோது உணவுக்காக மான் ஒன்றைத் துரத்திச் செல்ல மான் ஹறம் என்னும் காபாவின் எல்லை நோக்கிச் சென்றது. ஹறம் தூய்மையான பகுதி என்பதாலும் அருள் நிறைந்த பகுதி என்பதாலும் மானைப் பிடிக்க முயற்சிக்காமல் ஓநாய் அதன் எல்லையில் நின்றது. அப்போது அங்கிருந்த அபூஜகில், அபாசுபியான், சபுவான் ஆகிய மூவரும் ஓநாய் மானைப் பிடித்திருக்கும் என்னும் எண்ணம் கொண்டிருந்தனர்.

ஆனால் அதற்கு மாறாக அங்கு நடைபெற்ற செயல் அவர்களை வியப்பில் ஆழ்த்தியது. அப்போது அவர்களிடம் ஹறம் புனிதப் பகுதி என்று காபிர்களைப் பார்த்துப் பேசியதைக் கண்டு அவர்கள் வியப்படைந் தனர். அப்போது ஓநாய் எல்லையில் இருந்து பேசுவதைப் புதுமை என்று உணரும் நீங்கள் உள்ளே இருக்கும் அதிசயத்தை அறியவில்லையோ என அவர்களை வினவிப் பேசத் தொடங்கியது. இதனை,

**ஆதிதன் ஒளிவினில் தரித்து அநாதித்தன்**
**தூதென்று உலகினில் தோன்றி கின்றனர்**
**வேதமும் இறங்கின மெய்மை வேதத்தின்**
**நீதமும் நடத்தினர் நிகரும் இல்லையால்**

*(சீறா. ஓநாய் பேசிய படலம், 16)*

என்னும் பாடல் தெளிவுபடுத்தும். இப் பாடலில், இறைவனின் ஒளியால் உருவான இறைத்தூதர் மண்ணுலகில் தோன்றினார். அவருக்குள் புனிதக் குரானும் இருக்கிறது. அவருக்கு நிகராகச் சொல்லத்தக்க எவரும் இல்லை. அவருக்குத் துன்பம் செய்ய நினைக்கிறீர்களே இதைவிடப் புதுமை என்ன இருக்க முடியும் இறைத் தூதர் முகமது நபியின் சொற்களை மறுக்கும் பகைவர் களாகிய உங்கள் முகத்தைக் காண்பதும் பாவம் என்று கூறிக் காட்டுக்குள் ஓடி மறைந்தது என்னும் செய்தி பதிவு பெற்றுள்ளது. இதனால் அஃறிணை உயிர் களும் அறச் செயல் எது அறம் அல்லாச் செயல் எது என அறிந்திருந்தமை தெளிவாகும்.

## நபியின் பெருமையைப் புலி அறிவித்தல்

மதீனா நகர் இடையன் புலி பேசிய நிகழ்வின் மூலம் நபியின் சிறப்புகளை அறிந்து இசுலாத்தில் இணைகிறான். அவன் இசுலாத்தில் இணைய நபியின் உயரிய சிந்தனை காரணமாக அமைகிறது. வனத்தில் ஆடுகளை மேய்க்கச் சென்றிருந்த உகுபான் ஆடுகளை மேய விட்டு உறக்கத்தில் ஆழ்ந்திருந்தபோது சினை கொண்ட ஆட்டைப் புலி தூக்கிச் சென்றது. ஆட்டின் கதறல் கேட்ட உகுபான் அதன் பின் சென்று ஆட்டை விடுவித்தான். அச்சம் கொண்ட புலி காட்டுக்குள் ஓடியது. உகுபான் தன் களைப்புத்தீர மர நிழலில் இருந்தபோது ஆட்டைத் தூக்கிச் சென்ற புலி ஒரு குன்றில் ஏறி எனக்காக இறைவன் கொடுத்த இரையைப் பறித்துக் கொண்டது நியாய மான செயலா என்று வினவியது அப்போது மனிதக் குரல் எங்கிருந்து வருகிறது என உற்று நோக்கிய உகுபானிடம் பேசியது நான்தான் என்று புலி கூற, அவன் மற்ற இடையர்களையும் அழைத்து புலி பேசிய தைக் கூறினான். அப்போது புலி நான் பேசியது புதுமை என்று கூறுகிறீர்கள் ஆனால் முகமது நபி மக்கா நகரை விடுத்து மதீனா நகரம் வந்திருக்கிறார். அவரது நெறியை ஏற்று அதனைப் பின்பற்றுவது கடமை அல்லவா, அதனை ஏற்காமல் இருப்பது அறியாமை அல்லவா என்று பேசுகிறது. புலி பேசிய அனைத்தையும் கவனமாகக் கேட்ட உகுபான் தன் நிலையை எண்ணி வருத்தம் கொள்கிறான். நாம் இருக்கும் நிலையைப் புலி உணர்த்துகிறது எனில் இதுவரை அறியாமையில் உழன்றிருக் கிறோம் விலங்கோடு விலங்காக உண்மை நிலை தெரியாமல் வாழ்ந்திருக்கிறோம் என்று நினைத்து இசுலாத்தில் சேர்ந்தான். முகமது நபியை வாழ்த்தியவாறு இடையர் சேரியை அடைந்தான். அவன் இசுலாத்தை ஏற்ற நிகழ்வைப் பின்வரும் பாடல் விளக்குகிறது.

**விண்கத் துரைத்த கொடிப்புலி குருவாய்**
**மேவலன் விதிமுறை ஈமான்**
**கொண்டனன் உஃபான் எனப்பலர் குழுவிப்**
**புகழ்ந்திடக் கொண்டலைப் போற்றி**
**வண்டுயிர் அலங்கல் மன்னவர் எவர்க்கும்**
**மமைமிழ் தா சலாம் உரைத்துத்**
**தெண்டிரை ஒலியின் மத்தொலி கறங்கும்**
**ஆயர்தம் சேரியிற் புக்கான்**

*(சீறா. உருபான் படலம், 25)*

## நோன்பும் மனித மதிப்பும்

சீறாப்புராணம் மனித மதிப்பின் உயர்வு களை தோன்பின் மூலம் எடுத்துக் காட்டி யிருக்கிறது. இருள் விலகும் காலை முதல் இருள் பரவும் இரவின் தொடக்கம் வரை உண்ணாமல் இருத்தல் நோன்பு எனப்படு கிறது. இரமலான் மாதம் முழுதும் நோன்பு நோற்பது இசுலாமியர்களின் அடிப்படைக் கடமையாகும். உடலையும் மனத்தையும் தூய்மைப்படுத்தும் நோன்பாக ரமலான் நோன்பு அமைகிறது. "நோன்பு என்பது அரபியில் ஸௌம் எனப்படும். ஸௌம் என்பதற்குத் தவிர்த்திருத்தல் என்று பொருள். வைகறையின் தொடக்கத்திலிருந்து பொழுது அடையும்வரை ஒருவன் உண்ணுதல், பருகுதல், உடலுறவு கொள்ளுதல் ஆகியவ ற்றைத் தன்னிடமிருந்து தவிர்த்துக் கொள்வ தால், இது இப்பெயர் பெற்றது. ஸௌம்

என்பது 'தவிர்த்திருத்தல்' என்னும் பொதுப் படையான பொருளைத் தந்தபோதிலும், உண்ணுதல், குடித்தல்,நகர்தல், பேசுதல் ஆகிய இவற்றைத் தவிர்த்திருத்தல் என்ப தையே சிறப்பாகக் குறிக்கும். இரையுண் ணாதும் அசையாதும் உள்ள குதிரை, சிறிதும் அசை வின்றியுள்ள காற்று ஆகியவை 'ஸௌமில்' உள்ளன எனப்படும். மக்காவில் வெளியான இறையுரையில் தவிர்த்திருத்தல் (ஸௌம்) என்பது பேச்சைத் தவிர்த்திருப்ப தையும் உள்ளடக்கியிருக்கிறது. மர்யத்திடம், ஜிபுறயீல், "நான் ரஹ்மானுக்கு நோன்பு நோற்கிறேன்; ஆகவே இன்றைய தினம் எம்மனிதருடனும் பேசமாட்டேன் என்று கூறிவிடு!" என்று சொன்னதாகத் திருக்குர்ஆன் கூறுகிறது. இசுலாமிய நோன்பு உண்ணுதல்,பருகுதல், உடலுறவு கொள்ளுதல் ஆகியவை இன்றி இருத்தலையே சுட்டுகிறது. பிற மதங்களில் ஒருவேளை உணவை மட்டும் தவிர்த்து நோன்பிருப்பவர் உண்டு; உணவைத் தவிர்த்தாலும் பால், பழச்சாறு பருகி நோன்பிருப்பாரும் உண்டு: ஒன்றிரண்டு நாட்கள் மட்டுமே தொடர்ந்து நோன்பிருப் போரும் உண்டு. ஆனால் இசுலாமியர்களோ ஒன்றிரண்டு நாட்கள் அன்று; ஒரு திங்கள் முழுவதுமே, பகல் வேளை முற்றிலுமாக, ஒரு துளிப் பருக்கையோ ஒரு சொட்டு நீரோ வாயினுள் புகாமல் நோன்பிருந்து வருகின்றனர்" **(சிலம்பொலி செல்லப்பனார், 2004, பக். 99, 100)** நோன்பு எத்தனை மன, உடல் தூய்மைக்கு முக்கியமோ அவ்வாறே நோன்பு நோற்க இயலாதவர்களுக்கான விதிவிலக்கு களும் தரப்பட்டுள்ளன. நோயாளியாக இருப்பவர்கள் பயணத்தில் இருப்பவர்கள் அந்நாட்களில் நோன்பு நோற்க வேண்டியது இல்லை அதற்குப் பதிலாக ரமலான் மாதம் அல்லாத பிற மாதங்களில் அந் நாட்களுக் கான நோன்பு நோற்கலாம் என்று குறிப்பிடப்படுகிறது. நோன்பு இருக்க இயலாத வர்கள் அந்நாளில் ஏழைக்கு அன்னம் இடுதல் வேண்டும். நோன்பு நோற்கும் சக்தி இருந்தும் நோன்பு நோற்காதவர்கள் நோன்பு இருக்காத ஒவ்வொரு நாளுக்கும் ஏழை ஒருவருக்கு உணவிட வேண்டும். இரமலான் மாதத்தில் குரான் மொழிகள் அருளப்பட்ட காரணத்தால் சிறந்ததாகக் கருதப்படுகிறது. குரான் மனித இனத்தில் அறியாமையைப் போக்கும் தன்மையது. உடல் தூய்மை மனத்தின் தூய்மை அனைத்தையும் குரான் வலியுறுத்துகிறது. அதிகாலை எழுதல் முறையான விதிமுறைகளைப் பின்பற்றுதல் காலையில் பொழுது விடிவதற்குள் உணவு உண்ணல், இறைவனை வணங்கி நோன்பை முடித்தல் குறைவான உணவை எடுத்துக் கொள்ளல் முறையான தொழுகையை மேற்கொள்ளல் மக்களுடன் நெருங்கி அவர்களுக்குத் தொண்டு செய்தல் குரானை ஓதுதல் பொறுமை பணிவு ஆகியவற்றைக் கடைப்பிடித்தல் புலன்களை அடக்குதல் ஆகியவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும்.

இசுலாம் கொண்ட நோன்பு மனித இனத்தின் உயர்வுக்குக் காரணமான கூறு களைக் கொண்டு விளங்குகிறது. குறிப்பாக மனித மனத்தின் நல்லகுணங்கள் மேம்படு வதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருகிறது. மனிதன் தனக்கும் பிறருக்கும் உதவிகரமான வாழ்க்கை வாழ வேண்டும் அதன் மூலம் மனித இனத்தின் உயர்வுக்காகப் பாடுபட வேண்டும் என்னும் சிந்தனையை மனிதனுக்குள் விதைக்கிறது. மனத்தில் அன்பு கொள்ளல் விட்டுக் கொடுக்கும் பண்பைக் கொண்டிருத்தல் ஏழைகளுக்கு உதவி செய்தல் ஐம்புலன்களை அடக்குதல் முதலான பண்புகள் இசுலாத்தின் சிறந்த கொள்கைகளாக அமைந்திருக்கின்றன.

## முடிவுரை

சீறாப்புராணம் முகமது நபியின் வரலாற்றை எடுத்துக் கூறும் காப்பியம். மனித மனம் சீரடைய வேண்டும் என்னும் உயரிய நோக்கம் இசுலாம்ய சமயத்தால் கற்றுத் தரப் பட்டிருக்கிறது. மனிதன் அறக் கோட்பாடு உடையவனாக இருத்தல் வேண்டும் என்பது இசுலாம் சமயத்தின் நோக்கமாகும். புரிந்து கொள்ளல் விட்டுக் கொடுத்தல் அறம் செய்தல் இரக்கக் குணமுடன் இருத்தல் முதலான மனித மதிப்புகளைச் சீறாப்புராணம் எடுத்துக் கூறியிருக்கிறது.

## துணை நூல்கள்

⇒ செல்லப்பன் சு, (2004) நெஞ்சையள்ளும் சீறா, நேஷனல் பப்ளிசர்ஸ், சென்னை.

⇒ பரிமேலழகர், (2007) திருக்குறள் மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை.

⇒ பழமொழி மூலமும் உரையும், (2007): சாரதா பதிப்பகம், சென்னை